06/**03/2024**

**OS. No. 57/2022**

**பி.வா.சா.3. மகாதேவன்**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் இந்த வழக்கில் 3 ம் தரப்பினர். பிரமாணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். என்னுடைய ஆதார் அட்டையின் நகல் பி.வா.சா.ஆ.4.

**குறுக்கு விசாரணை**

எனக்கு 56 வயதாகிறது. நான் 10 வகுப்புவரைபடித்துள்ளேன். விவசாயம் செய்கிறேன். சாட்சி சொல்ல 1ம் பிரதிவாதி அழைத்து வந்தார். 1ம் பிரதிவாதி 1977 ல் பிறந்தார் என்று எனக்கு எப்படி தெரியும் என்றால் 1ம் பிரதிவாதி அவருடைய பிறப்பு சான்றிதழ் என்னிடம் காட்டினார். பிறந்த தேதி மாதம் தெரியாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு பிறப்பு சான்றிதழ் கிடையாது என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வரதராஜனும், கோவிந்தசாமியும் எனக்கு பழக்கம் இல்லை என்றாலும் அவர்களிடம் நான் படியாளாக வேலை செய்கிறேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பத்மாவதி 1ம் வாதி குமாரி வீட்டிற்கு வரும்போது வரதராஜனிடம் பழக்கம் ஏற்பட்டது என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கலா உயிருடன் இருக்கும் போது வரதராஜன் 1ம் வாதியை திருமணம் செய்துக்கொண்டார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கலா 1986 ல் இறந்துவிட்டார் என்பதற்கு ஆதாரம் பார்க்கவில்லை. கலா 1986 ல் இறந்துவிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வரதராஜன் குமாரியை திருமணம் செய்துக்கொண்டதால் கலா மனஉளைச்சாலாகி இறந்துவிட்டார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் குடும்பம் பற்றி எனக்கு தெரியாது என்றாலும் 1ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.